**<u>அவசரக் கூட்டம்</u>**

வெள்ளகோவில் நகராட்சியின் அவசரக்கூட்டம் 2025-ம் ஆண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் நவம்பர் மாதம் **11.11.2025-ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு** நகர்மன்றக் கூட்ட அறையில் நடைபெற்று கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் எண். 772 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான சாலையில் மழைகாலங்களில் குழி ஏற்பட்டு வாகனங்கள் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதால் தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளில் உள்ள குழிகளை தார் மற்றும் சிமெண்ட் பேட்ச் அமைப்பது அவசியமாகிறது. மேற்கண்ட பணியினை **பொது நிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.10.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன்அனுமதியின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்.2623/2025/இ1)**

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 773 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள், கொசு ஒழிப்பு பணியாளர்கள், (168 நபர்கள்) ஆகியவர்களுக்கு காலை உணவு வழங்க Catering Agency தேர்வு செய்தல் பணிக்கு 3 வருடத்திற்கு பணிகளை **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.95.10 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன்அனுமதியின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

.**(கோப்பு எண்.2582/2025/இ1)**

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 774 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் **குடிநீர்நிதி 2025-26-ன் கீழ்** நகராட்சிக்குட்பட்ட தெற்குப் பகுதியில் மொத்தம் 10 எண்ணிக்கையிலான மேல்நிலைத்தொட்டி மற்றும் 2 தரைமட்ட தொட்டியிலிருந்து காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி ஆற்று குடிநீர் ஆகிய இரு ஆற்றிலிருந்து குடிநீரானது OHTக்கு ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீரானது விநியோகம் செய்ய வால்வுகளை இயக்குவதற்கு பணியாட்கள் (Turn Cock) மொத்தம் 12 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.723/2025-ன் படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 31.10.2025ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | ஆறுபடையப்பன் அசோசியேட்ஸ் | மதிப்பிட்டை விட -0.01% குறைவு |
| 2 | சுப்பையா | மதிப்பிட்டை விட 5.30% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி, பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண். 2358/2025/இ1)**

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.775 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் **குடிநீர்நிதி 2025-26-ன் கீழ்** நகராட்சிக்குட்பட்ட மேற்குப் பகுதியில் 7 (OHT's) வடக்கு பகுதியில் 3 OHT's) மற்றும் கிழக்குப் பகுதியல் 1 (OHT) மொத்தம் 11 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி ஆற்று குடிநீர் ஆகிய இரு ஆற்றிலிருந்து குடிநீரானது OHTக்கு ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீரானது விநியோகம் செய்ய வால்வுகளை இயக்குவதற்கு பணியாட்கள் (Turn Cock) மொத்தம் 11 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.722/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 31.10.2025ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | ஆறுபடையப்பன் அசோசியேட்ஸ் | மதிப்பிட்டை விட -0.01% குறைவு |
| 2 | சுப்பையா | மதிப்பிட்டை விட 5.30% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி, பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண். 2359/2025/இ1)**

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.776 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 வேலகவுண்டன் பாளையம் காலணி, உப்புப்பாளைளயம் காலணி கிழக்கு, வையாபுரி நகர், மலையம்மன் கோவில் எதிர்புறம் ஆகிய பகுதிகளில் தினசரி உயோகத்திற்குரிய தண்ணீர் வசதி இல்லாத நிலையில் உள்ளது. மேற்படி பகுதியானது பொதுமக்கள், அதிகமுள்ள பகுதியாக இருப்பதால் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள Syntex Tankலிருந்து கூடுதலாக தண்ணீர் விநியோக குழாய்கள் அமைக்க **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.4.80 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.2674/2025/இ1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 777 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 வேலகவுண்டன்பாளையம் மற்றும் காலணி ஆகிய இரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு வர்ணம் பூசாமல் உள்ளது. மேற்படி பணியானது **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.3.90 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.2670/2025/இ1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 778 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வார்டு வரை உள்ள பகுதிகளில் காவேரி மற்றும் அமராவதி குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீரானது விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் குடிநீர் கொண்டு வரும் மெயின் குழாய்கள் அதிக அழுத்தம் காரணமாக உடைப்பு ஏற்படுகிறது. அந்த உடைப்புகளை உடனுக்குடன் சரிசெய்து பொதுமக்களுக்கு குடிநீரானது சீராக வழங்க **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.8.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.2671/2025/இ1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 779 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 செம்மாண்டம் பாளையம் மேற்கு பகுதி குறுக்கு தெருக்களில் உள்ள சாலைகளானது மழையினால் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே அதனை சரி செய்து சாலையை சீரமைக்க **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.4.90 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.2673/2025/இ1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 780 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14-ல் தீரன் சின்னமலை நகர் கிழக்கு சாலை மற்றும் 4வது குறுக்கு சாலை ஆகிய இரு சாலைகளும் பழுதடைந்து, போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளது. எனவே அதனை சீரமைக்க **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.4.60 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.2674/2025/இ1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 781 / 2025**

வெள்ளகோவில் நகராட்சி புதிய அலுவலகத்திற்கு Grade I Officer Table, Grade I Leather Finishing Office Revolving Chair, Visitor Chair, Corner Stand, Curtains, Teepoy Table, "L" Corner Sofa Set, two Door Wardroble, Office table ஆகிய பொருட்கள் தேவைப்படுகின்றன. அதனை பொதுநிதி 2025-26ன் கீழ் மேற்கொள்ள ரூ.5.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2686/2025/இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் எண். 782 / 2025**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளிகள், நகராட்சி நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி ஆகமொத்தம் 18 எண்ணிக்கையில் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட பள்ளிகளுக்கு அடிப்படை வசதியான தூய்மைப்பணி, கழிப்பிடம் சுத்தம் செய்தல், பள்ளி வளாகத்தை சுத்தம் செய்தல், கிருமி நாசினிகள் தெளித்தல், போன்ற சுகாதாரபணிகள் நகராட்சி மூலம் ஒப்பந்த அடிப்படை தூய்மை பணியாளர்களால் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 555/2025, நாள்.28.03.2025-ன் படி தீர்மானிக்கப்பட்டு பள்ளி சுகாதார பணிகள் நடைபெற்று பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது, மேற்கண்டபள்ளியில்படிக்கும்மாணவ – மாணவியர்களை சுகாதாரத்தை கருத்தில் கொண்டு 01.07.2025 முதல் 31.03.2026 முடிய ஏற்கனவே, ஒப்பந்தபணியாளர்களை சப்ளை செய்யும் திருவாளர் துரை&கோ எனும் நிறுவனத்தின் மூலம் சுகாதார பணிமேற்கொண்டு வருவதற்கும், அதற்கான செலவினம் மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலககுறிப்பு**

1. மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றதலைவர் முன் அனுமதி பெற்று பணிமேற்கொள்ளப்பட்டு ஏற்கனவே, ஒப்பந்தபுள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகைக்கு மிகாமல் பணிமேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.53/2024/எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) மு. கனியரசி
நகர்மன்றத்தலைவர்
வெள்ளகோவில் நகராட்சி

/ உண்மை நகல் /

17/x/25

ஆணையாளர்
வெள்ளகோவில் நகராட்சி

17/x/25

Scanned with OKEN Scanner